ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் செயல்முறைகள்: சென்னை - 600 006.

ந.க.எண்.11619/ஆ2/95, நாள்:1.12.95.

பொருள்: மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவன முதல்வர்கள் கூட்டம் - 17.11.95 & 18.11.95 ஆகிய நாள்களில் பெருந்துறையில் நடைபெற்ற - கூட்ட நடவடிக்கை - குறிப்பு - அனுப்புதல் - சார்பு.

பார்வை: இவ்வலுவலக ந.க.எண்.11619/ஆ2/95/நாள் 2.11.95.

----

பெருந்துறை மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனத்தில் கடந்த 17.11.95 மற்றும் 18.11.95 ஆகிய இருநாள்களில் நடைபெற்ற முதல்வர்கள் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை குறிப்பு இத்துடன் அனுப்பலாகிறது.

இணைப்பு:

கூட்ட நடவடிக்கை குறிப்பு.

இயக்குநருக்காக.

பெறுநர்:

அனைத்து மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிலைய முதல்வர்கள்.

ஆ.மு. 1112/4/95 நாள்: 13.12.95

தே.சா.

## இணைந்த மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு

தலைமை .. டாக்டர். பி. பழனிவேலு, எம்.எஸ்சி., பி.டி., பி.எச்டி.
இயக்குநர்,
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்,
சென்னை 6.

இடம் .. மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையம்,
பெருந்துறை,
பெரியார் மாவட்டம்.

நாள் .. 17.11.95 மற்றும் 18.11.95.

*****

**வரவேற்புரை:**

கருத்தரங்கிற்கு வருகை தந்த ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அவர்களையும், இணை இயக்குநர், துணை இயக்குநர், பேராசிரியர் மற்றும் அனைத்து மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர்களையும், முதன்மைக் கல்வி அலுவலர்களையும், மாவட்டக் கல்வி அலுவலர்களையும், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களையும் பெருந்துறை மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர் வரவேற்றார்.

**இயக்குநர் உரை:**

மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர்களும், முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்டக் கல்வி அலுவலர்களும், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் ஒருவரோடொருவர் இணைந்து செயல்பட்டால் தான் தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்த முடியும். ஒவ்வொரு துறையும் ஒன்றோடொன்று தொடர்பு இல்லாது செயல்படுகிறதோ என்ற எண்ணம் நிலவுகிறது. துறைகள் தனிப்பிரிவுகளாக இருந்து செயல்பட்டாலும் இலக்கு ஒன்று தான். துறைகள் பிரிகின்றபோது இலக்கு மாறுவதில்லை. அதிகப்படியான வளர்ச்சியடைய வேண்டும் என்பதால்தான் துறைகள் பிரிக்கப் படுகிறது. தொடக்கக் கல்வியை மேம்படுத்த மத்திய அரசு பலவகையான

திட்டங்களைத் தீட்டி வருகிறது. மாநிலம் முழுவதும் மாவட்டந்தோறும் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையங்களை நிறுவி தொடக்கக் கல்வியை மேம்படுத்த துணை புரிந்து வருகிறது. இது பயிற்சிப் பள்ளி மட்டுமல்ல. இந்நிலையங்களில் உள்ள 7 துறைகளில் 21 கல்வி வல்லுநர்கள் இருக்கிறார்கள். வெறும் பயிற்சிப் பள்ளியாக இருந்தால் 4 (அ) 5 ஆசிரியர்கள் இருந்தால் போதும். இக்கல்வி நிலையங்களில் ஏன் 7 துறைகளும், 21 கல்வி வல்லுநர்களும் செயலாற்றுகிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தொடக்கக் கல்வியானது 6 வயதில் தொடங்குகிறது. குழந்தைகள் அவர்களுடைய சூழ்நிலையிலுள்ள (விவசாயம், கைத்தொழில், மீன்பிடிக்கும் தொழில், தீப்பெட்டி தொழிற்சாலை போன்றவை) பழக்க வழக்கங்களுக்குத் தக்கவாறு பேசுகின்றன. பல்வேறு வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு வருகின்றன. கற்றல் என்பது வீட்டிலும் நடக்கலாம், வெளிச் சூழ்நிலைகளிலும் நடக்கலாம், பள்ளியிலும் நடக்கலாம். குழந்தைகளுக்குத் தெரிந்த ஒன்றிலிருந்து தெரியாத ஒன்றை கற்றுக் கொடுக்கிறோம். வட்டார அளவிலேயே சூழ்நிலைக்கேற்ப தொழில் சம்பந்தமான வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பித்தல் செய்ய மாவட்ட அளவிலே திட்டமிட்ட கல்வி அமைந்தால்தான் தொடக்கக் கல்வி வெற்றியடைய முடியும். நாடு தழுவிய தொடக்கக் கல்வி (அ) பாடப்புத்தகம் கொண்டு வர முடியாது. குழந்தைகள் நிலைக்கேற்ப கற்பித்தல் நிகழ்வது அவசியம். கல்வித்தரம் உயர வகுப்பறைகளில் செயல்பாடுகள் உயர வேண்டும். பாடப்புத்தகத்திலுள்ள படங்கள் முதலியன ஏற்புடையதா? இல்லையெனில் உங்கள் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம். தொடக்கக் கல்வியை வெற்றியடையச் செய்ய வேண்டுமானால் மாவட்ட அளவில் இந்த 7 துறைகளின் மூலம் தான் முன்னேற்றம் அடையச் செய்ய முடியும்.

## சிறந்த ஆசிரியரை உருவாக்குவதில் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையத்தின் பங்கு

பணி முன் பயிற்சித் துறையின் மூலம் நல்ல கல்வியை மாணவர்களுக்கு அளித்துவிட்டால் தொடக்கக் கல்வி நன்றாக அமைகிறது. கல்வித்திட்டம் மாறிக் கொண்டு வருகிறது. பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற தொழில்நுட்பம் மாறிக்கொண்டு இருக்கிறது. இதுதான் இறுதி வடிவம் என்று சொல்லமுடியாத நிலை இருக்கிறது.

எனவே, ஆசிரியர்கள் அவ்வப்போது மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவனங்கள் அளித்துவரும் பணியிடைப் பயிற்சி மூலம் கற்பித்தலில் புதிய உத்திகளைப் புகுத்தும் முறைகளைக் கற்று வந்தால்தான் தொடக்கக் கல்வி சிறப்பாக மேம்படும் என்பது குறிப்பு.

கற்பித்தலில் உபகரணங்கள் உபயோகித்தல்

வெறும் பாடப்புத்தகத்தைக் கொண்டு குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது குழந்தைகள் புரிந்துகொள்ள சிரமப்படுவதுடன் எளிதில் அவை மறக்கவும் செய்கின்றன. உபகரணங்களைக் கொண்டு சொல்லிக் கொடுப்பதன்மூலம் எண், எழுத்து, கூட்டல், கழித்தல், சூழ்நிலை, உடல் சுகாதாரம் போன்றவைப் பற்றி செயல் ஈடுபாட்டோடு கற்கும்போது கற்றல் எளிமையாகவும் சிறப்பாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைகிறது.

இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி

பள்ளிக்கு வரும் அனைத்து குழந்தைகளையும் முதல் வகுப்பில் குறைந்த பட்சக் கற்றல் இலக்குகளான 56- திறன்களையும் அடையச் செய்தல் அவசியம். ஓராசிரியர் பள்ளியாக இருந்தாலும் சரி, ஈராசிரியர் பள்ளியாக இருந்தாலும் சரி, பொருள், உபகரணங்கள், கட்டிட வசதிகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சரி, குழந்தைகளைப் பெற்றோர்கள் சரிவர பள்ளிக்கு அனுப்பாமல் இருந்தாலும் சரி, எத்தனை தடைகள் இருந்தாலும் அதையெல்லாம் தாண்டி இந்த 56 இலக்குகளையும் குழந்தைகள் அடைய வேண்டும். ஏனெனில் 2 (அல்லது) 3 ஆண்டுகள் பள்ளிக்குச் சென்றுவந்த தங்கள் குழந்தைகள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறது என்பதைப் படிக்காத பெற்றோர்களும் புரிந்துகொள்ள முடியும். ஏற்கனவே, குழந்தைகளைப் பெற்றோர்கள் ஆங்கில வழிக் கல்வி பள்ளிக்குக் அனுப்பி படிக்க வைக்கும் பழக்கம் பெருகி வருகிறது. ஏனெனில் அப்பள்ளிகளில் கற்றல் சிறப்பாக நடைபெறுகிறது என்று பெற்றோர்கள் நம்புகிறார்கள். கற்றல் வசதிகள், உபகரணங்கள், கட்டிடங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அங்கே நம்பிக்கையோடு அனுப்புகிறார்கள். தரம் இருக்கிறது என்று பெற்றோர்கள் நம்புவதால் அப்பள்ளிகளுக்கே குழந்தைகள் அனுப்பப்படுகின்றன. எனவே, 56 கற்றல் இலக்குகளையும் குழந்தைகள் அடையச் செய்வதன் மூலம் அவர்களைத் தவறாமல் பள்ளிக்கு வரவழைத்து இடையில் படிப்பை நிறுத்திவிடாமல் செய்ய முடியும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த பகுதிகளுக்குத் தக்கவாறு அமைய வேண்டும். தொழில்நுட்பம் புகுத்தப்பட வேண்டும். பள்ளிப் பணிகள் யா அமைக்கத் திட்டமிடப்பட வேண்டும். இலக்குகளை அடைவதற்கேற்ற கல்விப் பணிகள் அனைத்தையும் திட்டமிட்டு கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும். ஆசிரிய வகுப்பறையிலே செயல்படும் விதத்தை வைத்துத்தான் கல்வியின் தரம் அமைந்து உள்ளது. தொடக்கப் பள்ளி ஆசிரியராக இருந்தாலும், முதுநிலை ஆசிரியராக இருந்தாலும் முதலிலே அவர்கள் முழுமையான ஆசிரியராக இருக்க வேண்டும். நடத்துகின்ற பாடங்களுக்கு தகுந்த மாதிரி கல்வி உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும். பணியிடைப் பயிற்சி பெற வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் தவறாமல் பயன்படுத்திக் கொண்டு தன் திறமைகளை வளர்த்துக்கொள்ளுவாரான அவர் தொடக்கத்திலே எவ்வளவு சிறப்பான ஆசிரியராக இருந்தாலும் அதைவிட பல மடங்கு சிறந்த ஆசிரியராக மாறும் நிலை உருவாகும் என்பது திண்ணம். தன்னையும் பயிற்றுவித்துக் கொண்டு அடுத்த வகுப்பிலே இந்த பாடங்களை இன்னும் சிறப்பாக நடத்தவேண்டும் என்று செயல்படுவாரானால் கல்வித்தரம் நன்கு உயரும். பள்ளியின் சூழ்நிலை குழந்தைகளின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு கல்வித்திட்டம் வகுத்துக்கொண்டு கல்வியைப் போதிக்கும் ஆசிரியர் திட்டமிட்டு செயல்படுவதால் வகுப்பறை கல்வித்தரம் உயரும். தொடக்கக் கல்வியை மட்டுமல்லாது எல்லா நிலைகளிலும் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையத்திலுள்ள 7 கூறுகளின் மூலம் கல்வியை வளர்ச்சியடையச் செய்ய முடியும், மாவட்டக் கல்வி அலுவலர்களும், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் தொடக்கக் கல்வியில் இந்த 7 கூறுகளின் செயல்பாட்டின் பலனை உதவிக் கல்வி அலுவலர்களுக்கு விளக்கி ஒவ்வொரு ஆசிரியரையும் இந்த 7 கூறுகளின் மொத்த உருவமாக சிந்தித்து செயல்படும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஒரு ஆசிரியர் முழுமை பெற்ற ஆசிரியராக இருக்க முடியும். புத்தகத்தை வைத்து மட்டும் போதிக்காமல், மாணவர்கள் அவரவர்கள் வகுப்புச் சூழ்நிலை, வீட்டுச் சூழ்நிலை, வெளி இடங்கள், மாணவர்கள் பள்ளிக்கு வருகின்ற வழியிலே உள்ள வண்டல் மண், கரிசல் மண் போன்றவற்றை தொடர்பு படுத்தி கற்பித்தல் நடைபெற வேண்டும்.

முதல் வகுப்பு புதிய பாடத்திட்டம் -- பணியிடைப் பயிற்சி:

முதல் வகுப்பிற்கு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி தற்பொழுது அனைத்து மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையங்களிலும் நடைபெறுகிறது. குழந்தைகள் அடைய வேண்டிய 56 திறன்களையும் முன்னிலைப்படுத்தி, பாடப்புத்தகத்திலே உள்ள பாடங்கள் அந்தந்த பகுதியிலே உள்ள குழந்தைகளுக்கு ஏற்புடையதாக உள்ளதா? இல்லையெனில் அதை மாற்றியமைத்து பயன்படுத்தும் முறை பற்றியும் போதிக்கப் படுகிறது. மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களை கேட்டுக் கொள்வது யாதெனில், இப்பணியிடைப் பயிற்சிக்கு ஆசிரியர்களை/உதவிக் கல்வி அலுவலர்களை தவறாமல் அனுப்பிவையுங்கள். நீங்களும் சென்று வாருங்கள். சில மாவட்டங்களில் உதவிக் கல்வி அலுவலர்கள்/ஆசிரியர்கள் பயிற்சிக்கு வருவதில்லை என்ற குறை சொல்லப்பட்டிருக்கிறது. உதவிக் கல்வி அலுவலர்கள் இப்பயிற்சியைப் பெற்றால்தான் பள்ளி ஆய்வின்போது ஆசிரியர்கள் இந்த 56 திறன்கள் அடிப்படையில் கல்வி போதிக்கின்றார்களா? என்பதை கண்காணிக்க முடியும். 4 மாவட்டங்களிலும் உள்ள உதவிக் கல்வி அலுவலர்களுக்கு ஒரு நாள் பணியிடைப் பயிற்சி அளிக்க மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையத்தின் மூலம் ஏற்பாடு செய்கிறோம். எந்த தேதியில் வைத்துக்கொள்ளலாம் என்பதை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் உடனே இயக்ககத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

5, 6-ஆம் வகுப்புகளுக்கு பணியிடைப் பயிற்சி:--

உயர்நிலைப் பள்ளிகளில் நிதி வசதி இருக்கிறது. பணியிடைப் பயிற்சிக்கு வரும் ஆசிரியர்களுக்கு பதிவுக் கட்டணம் ரூபாய் 25/- வசதிக் கட்டண நிதியிலிருந்து கொடுக்க முடியுமானால் ஆசிரியர்களுக்கு வேண்டிய உபகரணங்களை மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையங்களில் வழங்க முடியும். திண்டுக்கல் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையத்தில் 130 ஆசிரியர்களுக்கு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் வல்லுநர்களை அழைத்து (புவியியல் பாடத்தில்) பணியிடைப் பயிற்சி நடத்தப்பட்டது. அதைப்போல தங்கள் பகுதிகளிலுள்ள வல்லுநர்களை அழைத்து பயிற்சிகொடுக்கலாம்.

மாவட்டக் கல்வி அலுவலர்கள், தொடக்கக் கல்வி அலுவலர்கள் பெற்றோர்-ஆசிரியர் கழகத்திலிருந்தோ (அல்லது) வேறு ஏதேனும் நிதியிலிருந்தோ இப்பயிற்சிக்கு வேண்டிய நிதி உதவி செய்ய முடியும்.

5 (அல்லது) 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை பாடங்கள் மாறுகின்ற போது ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி கொடுப்பது மிகவும் அவசியமாகிறது. பெற்றோர்-ஆசிரியர் கழகம் (அ) பள்ளியின் வேறு நிதி உதவியோடு இந்த பணியிடைப் பயிற்சியை அரசாங்கத்தில் நிதி உதவியை எதிர்பார்க்காமல் நடத்த நாம் முயற்சிக்க வேண்டும். இந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டு அரசாங்கம் இதன் அவசியத்தை உணரும்படி செய்ய வேண்டும். 6-ஆம் வகுப்புகளுக்கு பணியிடைப் பயிற்சி கொடுக்க திட்டமிடலாமா, நிதி வசதி செய்து கொடுக்க முடியுமா என இயக்குநர் கேட்டதற்கு, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தை வலுப்படுத்துவதன் மூலமும், பள்ளி வசதிகள் கட்டட நிதியை அதிகப்படுத்துவதன் மூலமும் நிதி வசதி ஏற்படுத்தித் தர முடியும் என உறுதி கூறினர். ஒவ்வொரு பாடத்திற்கும் மாவட்டவாரியாக 100 (அ) 120 கருத்தாளர்களுக்கு பயிற்சி கொடுக்க டிசம்பர் மாதம் 15ம் தேதிக்குள் ஏற்பாடு செய்வதாக இயக்குநர் தெரிவித்தார்.

சாரணர்-சாரணியர் இயக்கம்:-

என்.சி.சி. உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் மட்டுமே உள்ளது. என்.எஸ்.எஸ். என்ற இயக்கம் மேல்நிலைப் பள்ளிகளில் மட்டுமே உள்ளது. மேலும் இவ்வியக்கங்களுக்கு உயர்ந்தபட்ச இலக்கு உள்ளது. ஆனால் சாரண-சாரணியர் இயக்கத்தில் எவ்வளவு மாணவர்களை வேண்டுமானாலும் சேர்க்கலாம். சேவை மனப்பான்மையை குழந்தைகளிடம் வளர்க்கும் இயக்கம் இவ்வியக்கம். எப்போதும் தூய்மை, பறவைகள், விலங்குகளிடத்தில் அன்பாக இருக்க வேண்டுமென்ற அறிய பண்புகளை கற்றுக்கொடுக்கின்ற இயக்கமாகையால் பல திறன்களை குழந்தைகள் வளர்த்துக்கொள்கிறார்கள். தன் கையே தனக்குதவி என்ற தன்னம்பிக்கையை வளர்க்கும் இயக்கம் இவ்வியக்கம். இந்த இயக்கம் வளர வேண்டுமென்பது அரசாங்கத்தின் குறிக்கோள். கல்வி வளர்ச்சியடைய வேண்டுமென்று

..7..

சொன்னால் அதற்கு உதவி புரிகிற இயக்கம் இவ்வியக்கம். மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவிக் கல்வி அலுவலர்கள் குறைந்தது 10 சதவித ஆசிரியர்களையாவது இவ்வியக்கத்தைச் சார்ந்த பணியிடைப் பயிற்சிக்கு அனுப்பிவைக்க முயற்சி செய்ய வேண்டும்.

டிசம்பர் 10ம் தேதிக்குள் உதவிக் கல்வி அலுவலர்கள் கூட்டம் நடத்தி 15ம் தேதிக்குள் ஆசிரியர்கள் பெயர்ப் பட்டியல் அனுப்பிவைக்குமாறும், இந்த இயக்கம் இல்லாத பள்ளிகளே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களை இயக்குநர் கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் இந்த இயக்கம் தொடங்க முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்டக் கல்வி அலுவலர்களும் முயற்சி செய்ய வேண்டுமென்றும், அனைத்து அலுவலர்களும் இவ்வியக்கத்தின் உறுப்பினராகச் சேர வேண்டுமென்றும் இயக்குநர் கேட்டுக் கொண்டார்.

<u>கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்களுக்கு சிறப்பு உடை:-</u>

வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் முறையே கருமை, வெண்மை நிறங்களில் மேலங்கிகள் அணிவதுபோல மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர்களும், கல்வி அதிகாரிகளும், தலைமை ஆசிரியர்களும் தங்கள் தனித்தன்மையை மேலும் கூட்ட நீலநிற மேலங்கியை அணியலாம் என்ற யோசனையையும் இயக்குநர் தெரிவித்தார்.

<u>தொடக்கக் கல்வி வளர்ச்சிப் பணியில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் பணிகள்:-</u>

தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்த பல்வேறு வழிகளில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் செயல்புரிந்து வருகிறது. இருப்பினும் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளிடமிருந்து கல்வித்தர மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. பெறப்படும் ஆலோசனைகளில் இருந்துதான் ஆராய்ச்சி தொடங்குகிறது. அனைத்து தொடக்கக் கல்வி அலுவலர்களும் உதவிக் கல்வி அலுவலர்களை சந்தித்து தொடக்கக் கல்வித் தரம் உயர உள்ள தடைகள் என்ன என்பதைக் கண்டறிந்து அவற்றை நீக்க மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய

...

வல்லுநர்களிடம் விவாதித்து தீர்வு பெறுங்கள். தொடக்கக் கல்வித் தரத்தை உயர்த்த உங்களுடைய எதிர்பார்ப்பு என்ன என்பதை மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர்களுக்கு அடிக்கடி எழுதவேண்டும் என்பதை வலியுறுத்துவதுதான் இக்கூட்டத்தின் நோக்கம். மாதந்தோறும் உதவிக் கல்வி அலுவலர்கள், தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு இது சம்பந்தமாக் சுற்றறிக்கையை முதல்வர்கள் அனுப்ப வேண்டும். முதல்வர்களுக்கான அடுத்த ஆய்வுக் கருத்தரங்கில் மேற்படி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட குறைகள், எதிர்பார்ப்புகள் பற்றி பரிசீலனை செய்யப்படும். உயர்நிலை, மேல்நிலைக் கல்வியை மேம்படுத்த ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் என்ன பணி மேற்கொள்ளலாம் என்பதை மாவட்டக் கல்வி அலுவலர்கள் இயக்ககத்திற்கு எழுதி கேட்கலாம்.

<u>உதவிக் கல்வி அலுவலர்களுக்கான மாதாந்திர கூட்டம்:-</u>

உதவிக் கல்வி அலுவலர்களுக்கான மாதாந்திரக் கூட்டம் நடைபெறும்பொழுது தொடக்கக் கல்வி அலுவலர்கள் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர்களுக்கு தெரிவிக்க வேண்டுமெனவும், முதல்வர்கள் அக்கூட்டங்களுக்கு தனியே செல்வதை தவிர்த்த கல்வி நிலையை வல்லுநர்கள் சிலரை அழைத்து செல்வது சிறப்பு ஆகும்.

உதவிக் கல்வி அலுவலர்கள், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களிடம் இருந்து பெறப்படும் குறைகளை, கருத்துக்களை கேட்டறிந்து அவற்றை நேரடியாக் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டால் மாவட்டம் முழுவதும் உள்ள குறைகளை போக்குவது கடினம். எனவே குறைகளை களைய என்ன செய்யலாம் என ஆராய்ச்சி செய்யுங்கள். தீர்வை கண்டுபிடியுங்கள். பிறகு அவற்றை மேற்படி அலுவலர்கள் மூலமாக மாணவர்களுக்கு சென்றடையும்படி செய்ய வேண்டும். கல்வி நிலையத்தின் குறிக்கோளே (1) ஆராய்ச்சி (2) தீர்வு என்ற அடிப்படையில் செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

<u>இலக்கை மாற்றாமல் அடிப்படைக் கல்வி:-</u>

ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வியை பெற்று உயரவேண்டும். இந்த இலக்கை அடைய ஊர்கள் தோறும் பள்ளிகள், பள்ளிகள் தோறும் ஆசிரியர்கள், மாணவர்கள் கையில் புத்தகங்கள் - இலக்குகளை அடைய

ஆசிரியர்கள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. இவ்விதிகளை ஆசிரியர்கள் பெறுவதற்கு ஒவ்வொரு ஆசிரியருக்கும் பணியிடைப் பயிற்சி அளித்து முழுமைபெற்ற ஆசிரியர்களாக உருவாக்கும் பொறுப்பு உங்கள் கையில் இருக்கிறது. மாணவர்களை பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களின் உதவியின்மை, வறுமை நிலை, மாணவர்களின் உடல்நலக் குறைவு, வகுப்பறை வசதிகள் இல்லாத நிலை போன்ற நிலைகளில் அம்மாணவர்களும் அரசாங்கத்தின் கல்வி இலக்குகளை அடையச்செய்வது ஒவ்வொரு ஆசிரியரின் கடமையாகும். நோக்கத்தை மாற்றாமல், இலக்கை மாற்றாமல் பாடம் கற்பிக்க வேண்டும்.

சாரணியம் என்ற பத்திரிக்கை ஒவ்வொரு மாதமும் வெளிவருகிறது. ஆண்டு சந்தா 40/-ரூபாய். மிகுந்த பயனுள்ள இந்நூலை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்டக் கல்வி அலுவலர்களும் எல்லா பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பி இப்பிரதிகளை வாங்குமாறு செய்ய வேண்டும். இப்புத்தகத்தை நூலக நிதியிலிருந்து வாங்கலாம்.

<u>இணை இயக்குநர் உரை :-</u>

ஆய்வு அலுவலர்களான உதவிக் கல்வி அலுவலர்கள் பள்ளி ஆய்வின் போது வெறும் புள்ளி விவரங்களை சேகரிக்கும் ஆய்வாக அல்லாமல் ஆசிரியர்களுக்கு பயன்படும் வகையில் தங்களை முதலிலேயே தயார் செய்துகொள்ள வேண்டும். என்னென்ன பாடங்கள் எந்தெந்த அடிப்படையிலே நடத்தப்படுகின்றன, அந்தந்தப் பகுதிகளிலுள்ள விலையில்லா கற்றல் உபகரணங்களைக் கொண்டு கல்வி போதிக்கப் படுகின்றனவா என்றும், திறன்கள் அடிப்படையில் கற்பிக்கப்படுகின்றனவா என்றும், குறைகள் இருக்கின்றதா என்றும் கண்டறிந்து தங்கள் பகுதியிலுள்ள ஆசிரியர்களை ஒன்றுபடுத்தி பயிற்சி வகுப்புகள் நடத்தலாம். ஆய்வின்போது திறமையாக கற்பிக்கும் ஆசிரியர்களை பாராட்டுவதோடு மற்ற பள்ளிகளின் ஆய்வின்போது அவரை முன் உதாரணமாக எடுத்துச்சொல்லி ஆசிரியர்களை ஊக்கப்படுத்தலாம். உதவிக் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன் சோதனைகளை மேற்கொள்ள பணியிடைப்பயிற்சி மிகவும் அவசியமானது என்பதையும் இணை இயக்குநர் அவர்கள் தெரிவித்து, கருத்தரங்கிற்கு வந்திருந்த அனைத்து கல்வி அலுவலர்களுக்கும் நன்றி கூறினார்கள்.

## இரண்டாம் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவன முதல்வர்களுக்கான பணி ஆய்வு கூட்டம்

நாள் : 18.11.95 நேரம் : மாலை 3.

பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட செய்திகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கங்களை பேராசிரியர் அவர்கள் தெரிவித்தார்கள்.

செய்திகள்

1. ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவனமும் தங்கள் பகுதியில் உள்ள ஏதேனும் 10 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து பள்ளிக் குழந்தைகளின் சமுதாய பின்னணி என்ன, அவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வர நாம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன, அந்தப்பகுதியின் மக்கள் தொகை எவ்வளவு, பள்ளிக்கு அனுப்பப்படாத குழந்தைகள் எவ்வளவு பேர், அனுப்பப்படாமைக்கு காரணம் என்ன, குழந்தைகள் ஒரு பள்ளியை விட்டு வேறு பள்ளிக்கு மாற்றலாகிச் செல்லும் காரணம் என்ன, மாற்றலாகிச் செல்லும் குழந்தைகள் கல்வியைத் தொடர்கின்றார்களா போன்றவற்றை ஆராய்ந்து வெற்றிக் களைய யுத்த தந்திரம் செய்யவேண்டும். பணிமுன் பயிற்சி மாணவர்களையும் இதில் ஈடுபடுத்தலாம். கிராமக் குழு ( Village Committee ) ஏற்படுத்தப்பட வேண்டும்.

3. Disadvantaged group – கல்வி பின்தங்கிய தங்கள் மாவட்டங்களில் இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள் என்றும், இதை விரிவுபடுத்த என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறீர்கள் என்றும் சேலம் மாவட்டத்தில் நிறைந்துள்ள கொல்லிமலை, ஏற்காடு போன்ற பகுதிகளை தேர்ந்தெடுக்கலாம். மேலும் மாவட்டம் முழுமைக்கும் தேவையான சமயோசித உபாயம் என்ன என்பதையும் குறிப்பிடும்படியும் பேராசிரியர் கேட்டுக்கொண்டார்.

8. படிப்பில் பின்தங்கியிருக்கும் குழந்தைகளுக்கும், Gifted Children-க்கும் மனநிலை பாதிப்புள்ள குழந்தைகளுக்கும் (உதாரணமாக மற்ற குழந்தைகளை அடிக்கடி அடித்தல், செடிகளை பிடுங்குதல் போன்ற செயல்கள்) தரப்பட வேண்டிய மனோதத்துவ ரீதியான புத்திமதி (அ) அறிவுறுத்தல் என்ன? வழிகாட்டுதல் என்ன? ( Counselling and guidance ) என்பது பற்றி குறிப்புகள் அடுத்த கூட்டத்தில் சமர்பிக்க வேண்டும்.

9. NCERT – புத்தகத்தில் உள்ள கருத்துக்கள் நம் மாவட்டத்தில் உள்ள குழந்தைகளுக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும்.

12. Co-curricular activities முக்கியத்துவத்தை பள்ளிப் பயிற்சி வரும் ஆசிரியர்களுக்கும் போதிக்க வேண்டும். தொடக்கப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

13 & 14.

பணி அனுபவப் பிரிவு ம் ல் எந்தெந்த வகுப்புகளுக்கு என்னென்ன வேலைகள் செயல்பாடுகளைப் பற்றி சொல்லிக்கொடுக்கலாம் என்பது கண்டறிந்திருக்கிறீர்களா என்றும் திறன் அடிப்படையில் ( Skills ) அதை அடிப்படையில் கண்டறியப்பட்டு உள்ளனவா என்றும், செயல்திறன் வங்கி ( Activities Bank ) (அ) Experience Oriented Work Bank உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். 1 முதல் 5 வகுப்பு வரைக்கான குழந்தைகளுக்கு வகுப்புகளுக்கேற்ப சரியான வேலையை கண்டறிந்து அந்தந்த வேலையில் ஈடுபட்டு செய்ய வேண்டும். வகுப்பறைகளில், வகுப்பறைக்கு வெளியே செய்ய வேண்டிய வேலை, தனியாக, குழுவாக செய்ய வேண்டிய வேலை என தரம் பிரித்து அதில் அவர்களை ஈடுபடுத்தி அதன் மூலம் அவர்கள் என்ன பலனை அடைவார்கள் என்பதை அறிவது தான் இந்த திறன் அடிப்படையிலான வேலையின் முக்கியத்துவமாகும். சமுதாய பள்ளியை எந்த காரணம் கொண்டும் மறந்துவிடக் கூடாது. உடல்நலப் பாதுகாப்பு, பல் தூய்மை, நகத் தூய்மை, பள்ளி வளாகத்திற்குள் மரம் நடுதல், தோட்டம் அமைத்தல் போன்ற வேலைகளை செய்ய வைக்கலாம்.

15. பணி அனுபவப் பிரிவில் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படவேண்டிய திறன் அடிப்படையிலான வேலை என்ன, அவற்றை பாடத்திட்டத்தை ஒட்டி எப்படி அமைப்பது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும்.

16. நமது கல்வி நிறுவனம் கற்றல் உபகரணங்களை பயன்படுத்தும் பல்வேறு உத்திகளை கற்றுக்கொடுக்கிற மையமாக அல்லாமல் உபகரணங்களை வடிவமைத்து ஆசிரியர்களை வகுப்பிலேயே அவைகளை பயன்படுத்தச் செய்ய ஆலோசனைகள் வழங்கலாம்.

19. நிறுவனங்களில் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா, எவ்வளவு மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன என்று பார்த்து நிறுவனத்திற்கென உள்ள அனைத்து காலி இடங்களிலும் மரங்கள் நடப்படவேண்டும். தண்ணீர் பற்றாக்குறை உள்ள நிறுவனங்கள் வாளரமுட்டி மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனத்தில் உள்ளது போன்ற பானைகளை மண் செய்த செடிகளுக்கு அருகில் வைத்து நீர் ஊற்றலாம். அடுத்த கூட்டத்திற்கு முன்பாக நிறைய மரங்கள் நிறுவனங்களில் நடப்பட்டிருக்கவேண்டும்.

20. மாவட்ட சமூக நல கருத்தாளர்களுக்கு தொடக்கக் கல்வியை மையமாக வைத்து கற்பிக்க வேண்டும். கற்றல் உபகரணங்களை முறைகள், பயன்கள், அந்த பொருட்கள் எங்கே என்ன விலையில் கிடைக்கிற[து] என்ற தகவல் தெரிவித்திருக்க வேண்டும்.

22 & 41

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் கல்வி ஒலிபரப்புகளில் முதல்வர்கள் பங்குகொள்ளவேண்டும். வாரம் 2 (அ) 3 நிகழ்ச்சிகள் கொடுக்கப் பட வேண்டும். மாவட்டத்தை ஒட்டிய பிரச்சனைகள் பேசப்பட வேண்டும்.

32. மலைவாழ் குழந்தைகளுக்கு பாடங்கள் ( Tribal Languages) தயாரிக்கும்போது மலைவாழ் மக்களை மனதில்கொண்டு அவர்களுக்கு தகுந்த பின்[னணி] அவர்களோடு பேசி பழகி அந்த அந்த இடத்திற்கு உரிய மொழிகளை உபயோகித்[து] பாடங்கள் தயார் செய்ய வேண்டும்.

36, 37 & 38

விலை மலிவு கற்றல் உபகரணங்கள் தயாரிக்க கல்வி தொழில்நுட்ப பிரிவு என்ன நடவடிக்கை மேற்கொள்கிறது? நம் மாவட்டத்தைக் கருத்தில்கொண்டு கலைத்திட்டமும் மதிப்பாய்வும் பிரிவு பாடங்களை முழுவதும் படித்து சூழ்நிலைக்குத் தகுந்த தேவையான விபரங்களை திரட்டி திட்டங்கள் தயாரிக்கவேண்டும்.

39. கல்வி சம்பந்தமான ஒலி நாடாக்கள் நிறைய தயார் செய்யப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட வழக்கிலுள்ள கதைப் பாடல்கள், உடல்கூறு சம்பந்தமான பாடல்கள் பதிவு செய்து பள்ளிகளில் பயன்படுத்தச் செய்யலாம்.

45. ஸ்லைடுகள், வீடியோ தயாரிப்பில் கல்வி தொழில்நுட்பப் பிரிவு மேம்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை புகுத்தியுள்ளதா எனவும், கல்வியை வேலையோடு இணைக்க வேண்டும், படிப்பும் வேலையும் இரண்டறக் கலந்த வேலை மூலமாக கல்வி, கல்வியின் மூலமாக நல்ல வேலை செய்கிற திறன் உருவாக்கப்பட வேண்டும்.

58. நிறுவன கல்வி வல்லுநர்கள் அனைவருக்கும் ஆராய்ச்சி மனப்பான்மை முக்கியமானது. கல்வியில் புதிய உத்திகளை கையாள வேண்டும். தேர்வு நடத்துவது, யந்திரத்தை பயன்படுத்துவது, பணியிடப் பயிற்சி நடத்துவது போன்ற எவ்வளவும்

ஒரு புதிய அணுகுமுறையோடு நாங்கள் சொல்வதை. அப்படியே செய்வதை விட்டு நீங்களாக புதிய உத்திகளை கையாள முயற்சிக்கவேண்டும். ஒவ்வொரு பணியையும் இந்த அணுகுமுறைக்கு உட்படுத்தப்படவேண்டும். முதல்வர்கள் கல்வி நிலைய வல்லுநர்களை இத்தகைய அணுகுமுறையோடு Alert - ஆக வைத்திருக்கவேண்டும்.

59 & 60, நிறுவனத்தின் தொடக்கமே முதல்வரின் மூளை. முதல்வர்கள் நிறைய நூல்களை படிக்கவேண்டும். உணவை வயிறு செரிப்பதுபோல படித்தவை அறிவால் அலசிப்பட்டு ஆராய்ச்சி செய்யவேண்டும். தீர்வு காணவேண்டும், கல்வி நிலைய வல்லுநர்களுடன் விவாதிக்கவேண்டும். படித்தவை பண்படுத்தப்படவேண்டும்.

18.11.95 இரண்டாம் நாள் பணி ஆய்வு கருத்தரங்கில் திரு ஜெயச்சந்திரர் அவர்கள் பேசும்போது நிறுவனத்தில் பணியாற்றும் விரிவுரையாளர்கள்/முதுநிலை விரிவுரையாளர்கள் வாரந்தோறும் தவறாமல் குறைந்தது 100 பக்கங்கள் கல்வி சம்பந்தமான புத்தகங்களை படித்து அப்புத்தகங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களை தத்தம் மாவட்டங்களில் கல்வியின் வளர்ச்சிக்கு எங்ஙனம் பயன்படுத்தலாம் என்பது குறித்துத் தவறாமல் வாரத்தின் முதல்நாளான திங்கள் கிழமையன்று 3 பக்கங்களில் பொருள் சுருக்கம் தயாரித்து முதல்வரிடம் தரவேண்டுமென்றும், முதல்வர்கள் விரிவுரையாளர்கள் வாரியாக தனி கோப்பு தயாரித்து அவர்கள் எழுதிவரும் குறிப்புகளை தொகுத்து நூலகத்தில் வைத்துப் பராமரிக்கவேண்டும். அன்று மாலை அவர்கள் எழுதியதை விரிவுரையாளர்கள் முதல்வரின் தலைமையில் கூடிக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவேண்டும்.

மாவட்ட கல்வி பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் தனது மாறுதல் விண்ணப்பம் உட்பட அனைத்துக் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களையும் முதல்வர் வழியாக இயக்ககத்தின் மூலமாகத்தான் மற்ற துறைக்கு அனுப்பவேண்டும்.

நிறுவன விரிவுரையாளர்கள், நிறுவன பணிகளைப் பாதிக்காமல் தொடக்கப் பள்ளிகளை குறைந்தது மாதத்திற்கு 5 முறை பார்வையிடவேண்டும். இனி UPE, UEE, ECE - போன்ற பயிற்சிகளும் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவனத்தின் மூலம் மட்டுமே நடைபெறும்.

செயலர் உரை:

நிறுவனங்களில் கணிப்பொறிகள் பயன்படுத்தப்படவேண்டும். முதுநிலை விரிவுரையாளர்கள்/விரிவுரையாளர்கள் அனைவரும் கணிப்பொறியைப் பயன்படுத்த பயிற்சி கொடுக்கப்படவேண்டும். பணியிடைப் பயிற்சி பெற்ற/பெறாத ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் பதிவு செய்ய வேண்டும். உதவிக் கல்வி அலுவலர்களிடமிருந்து மாதாந்திர அறிக்கை( Monthly Return ) வாங்கிப் பதிவு செய்யலாம். ஆசிரியர்களைப் பணிமாறுதல் செய்யும் முன்பும், பணிமாறுதல் செய்யப்பட்ட பின்பும் பட்டியல் பெற்றிட்டு நாட்கள் பதிவு செய்யப்படவேண்டும். நிறுவனத்தின் பணிமுன் பயிற்சி மாணவர்களுக்குக் கணிப்பொறி பயிற்சி அவசியம் கொடுக்கப்படவேண்டும். கணிப்பொறி பொருத்தப்படாத நிறுவனங்களுக்கு விரைவில் கணிப்பொறிகள் பொருத்த ஆவன செய்யப்படும்.

1-ம் வகுப்புக்குரிய 3 புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு 7 முறைகள் வாயிலாக புத்தகத்தை வரிவரியாக படிக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஒரு வாரம் அவகாசம் எடுத்துக் கொள்ளலாமென்றும், புத்தகங்கள் நமது மாவட்டத்திற்கு ஏற்றதாக உள்ளதா, நம் சூழ்நிலைக்கு ஏற்றதாக உள்ளதா, கருத்துக்கள் நமது மாவட்டத்திற்கு ஏற்றதாக உள்ளதா எனவும் பார்க்கவேண்டும். 56 திறன் அடைவுகளைப் பற்றியும் நிலைய வல்லுநர்கள் ஒவ்வொருவரும் கருத்துக்கள் சொல்லவேண்டும். கல்வித்தர மேம்பாட்டிற்கு D.T.E.R.T. -ன் பணிகளை மேலும் எவ்வகையில் விரிவுபடுத்தலாம் என்ற ஆலோசனைகள் முதல்வர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

ஆடுதுறை மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய முதல்வர்(பொறுப்பு) உதவிக் கல்வி அலுவலர்கள் பணியிடைப் பயிற்சிக்கு வருவதில்லை என்று செயலரிடம் தெரிவித்தார். பயிற்சிக்கு வராத உதவிக் கல்வி அலுவலர்களிடம் அவர்கள் பயிற்சிக்கு வராமல் இருந்தமைக்கான காரணம் கேட்டு பதில் பெற்று செயலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். இதுபற்றித் தொடக்கக் கல்வி செயலருக்கு எழுதி அனைத்து தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும், உதவிக் கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் என்றும் செயலரால் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த கூட்டத்திற்கு வரும்பொழுது நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய பணிகள் பற்றி நிறைய சொல்லவேண்டும். தங்கள் பகுதிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் படிப்பை பாதியில் நிறுத்தும் சூழ்நிலை உள்ள மாணவர்களை கண்டறிந்து குறைந்தது 200 பேர்களுக்காவது தொடர்ந்து சிறப்பு பயிற்சி கொடுக்கவேண்டும். கல்வி மேம்பாட்டிற்கு தோன்றுகின்ற புதிய கல்வி உத்திகளை நிறுவனங்களிடையே பரிமாற்றம் செய்து கொண்டு பல்வேறு திறன்களை பயன்படுத்தும் முறைகளை கண்டறிந்து ஆசிரியர்களை ஊக்கப்படுத்தவேண்டும். கல்வி நிலையத்தின் முக்கியமான குறிக்கோள் ஆராய்ச்சி மனப்பான்மையை குழந்தைகளிடம் வளர்ப்பது, குழந்தைகள் என்பவர்கள் எதிர்காலத்தை வளம்படுத்தக்கூடியவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, வெறும் புத்தக அறிவை மட்டும் புகுத்துவதிலிருந்து மாறுபட்டு அவர்களை வளம்படுத்தக்கூடிய, மேம்படுத்தக்கூடிய, ஆராய்வுத்திறனை ஊக்கப்படுத்தக்கூடிய நிலையில் நாம் இருக்கிறோம். அடுத்த கூட்டம் 29,30.12.95-ம் தேதிகளில் வடலூர் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையத்தில் நடைபெறும்.

இவ்வாறு நமது ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்கள் தமது அறிவுரைகளை வழங்கினார்கள்.

இயக்குநருக்காக.

4/12